## "உடல், உளம் பற்றிய சமகாலப் பிரச்சினைகள் - ஒரு மெய்யியல் பகுப்பாய்வு"

**Supervisor**
*Mr. ILM. Mahir,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. ARF. Siyama,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

### ஆய்வுச் சுருக்கம்

கிரேக்க காலத்தில் இருந்தே மனம் பற்றிய பிரச்சினைகள் எழ ஆரம்பித்தது அறிதற்குரியதாகும். மனம் தொடர்பான கருத்துக்கள் ஆரம்ப காலத்தில் இனங்காணப்பட்டாலும் கடந்த சில நூற்றாண்டுகளாக இக்கருத்துக்கள் பிரபல்யமடைந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். கிரேக்க காலத்தில் ஆன்மா - உடல் எனும் பிரச்சினைகள் விளங்கிக்கொள்ளப்பட்ட வகையிலும் தற்காலத்தில் மனம்-உடல் எனும் பிரச்சினைகள் விளங்கிக்கொள்ளப்பட்ட வகையிலும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. பிளேட்டோவின் காலத்தில் ஆன்மா எவ்வளவு முக்கியத்துவப்படுத்தப்பட்டதோ அதேபோல டேக்காட்டின் காலத்தில் மனம் தொடர்பான கருத்துக்கள் பிரபல்யமடைந்தன. இது பற்றிய பிரச்சினைகள் இதன் உள்ளடக்கத்தினைத் தெளிவாக வரையறை செய்வதை வேண்டி நிற்கின்றன. மெய்யியலாளர்களும், பல்வேறுபட்ட சிந்தனையாளர்களும் உடல், உளம் தொடர்பான கருத்தாடல்களையும், கோட்பாடுகளையும், எண்ணக்கருக்களையும் முன்வைத்துள்ளனர். இதனடிப்படையில் தமது விமர்சனங்களையும் பகுப்பாய்வு செய்தனர். அந்தவகையில் இவ்வாய்வானது சமகாலத்தில் பேசப்படும் உடல், உளம் தொடர்பான பிரச்சினை விளக்கத்தினை மெய்யியல் ரீதியாக பகுப்பாய்வு செய்வதும் அது தொடர்பான கருத்தியல் விளக்கங்களை தெளிவு படுத்துவதும் அதனூடாக மனிதனுக்கு ஏற்படும் உடல், உளம் தொடர்பான சமகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதும் ஆய்வுப் பிரச்சினையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாய்வானது சமகாலத்தில் உடல், உளப் பொறிமுறையினை ஆய்வுக்குட்படுத்துவதினை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வுக்கான தரவுகள் பிரதானமாக இரண்டாம் நிலை மூலங்களான நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டு அவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறுதியாக, உடல், உள செயற்பாட்டுப் பொறிமுறையினை சமகாலத்தில் முன்வைக்கப்பட்ட விளக்கங்களினூடாக ஆராய்ந்து தெளிவுபடுத்துவதையே இவ்வாய்வு முடிவாக உரைக்கின்றது.

**Key words**: உடல் (Body), உளம் (Mind), சமகாலப்பிரச்சினைகள் (Contemporary Issues)

**"தரம் - V புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் எதிர்நோக்கும் உளவியல் பிரச்சினைகள் : கல்முனை கல்வி வலயத்தை மையமாகக் கொண்ட விஷேட ஆய்வு"**


**Supervisor**
*Dr. K. Kanesarajah,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. MAS. Irfana,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*


**ஆய்வுச் சுருக்கம்**


இந்த நாட்டில் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு அடிப்படை அம்சமாக அமைவது கல்வி ஆகும். இந்த கல்வியானது இன்றைய மாணவர் சமூகத்தில் பல்வேறு சவால்களை எதிர்நோக்கிய ஒன்றாக காணப்படுகின்றது. அந்த வகையில் எனது இந்த ஆய்வானது, கல்முனை கல்வி வலயத்தை மையமாகக் கொண்டு தரம் - V புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் எதிர்நோக்கும் உளவியல் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதையே பிரதான நோக்கமாகக் கொண்டு காணப்படுகின்றது. இலங்கை அரசாங்கத்தினால் ஏழை மாணவர்களுக்கு உதவித் தொகையை வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட பரீட்சையாக ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை காணப்படுகின்றது. இப்பரீட்சை மூலம் தகுதியான மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கௌரவிக்கப்படுவதுடன் ஊக்கத்தொகையும் வழங்கப்பட்டு வருகின்றது. மெய்யியலானது அறிவாராய்ச்சியியல், ஒழுக்கவியல், பௌதீகவியல், அழகியல் என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படும் அதே வேளை இதன் ஒரு பகுதியாக உள மெய்யியல் (Philosophical Psychology) காணப்படுகின்றது. உளவியலானது, பொது உளவியல், பிரயோக உளவியல் என இரு பெரும் பிரிவாகப் பிரிக்கப்படுகின்றது. பிரயோக உளவியலில் அடங்குகின்ற ஒரு பகுதியாகவே கல்வி உளவியல் காணப்படுகின்றது. கல்வி உளவியலாளர்களும் மெய்யியலாளர்களும் கல்வி பற்றிய கோட்பாடுகளையும், எண்ணக்கருக்களையும் வரலாற்றோடு தொடர்புபடுத்தி விளக்கி நிற்கும் அதே வேளை கல்வியினால் ஏற்படுகின்ற பல்வேறு பாதிப்புக்களைப் பற்றியும் கூடிய கவனம் செலுத்தி இருக்கின்றனர். அந்த விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மாணவர் சமூகத்தை அப்பிரச்சினைகளிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய ஒரு தேவைப்பாடு ஆய்வாளர்களுக்கு இருக்கும் அதே நேரம் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும், சமூகத்திற்கும் இது தொடர்பான விழிப்புணர்வை பெற்றுக் கொள்வதற்கு இவ்வாய்வு உதவுகின்றது. இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவுகளாக வினாக்கொத்து, கள ஆய்வு, நேர்காணல், என்பனவும், இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வறிக்கைகள், கட்டுரைகள், பத்திரிகைகள், இலத்திரனியல் ஊடகம் போன்றனவும் அடங்குகின்றன. இறுதியாக, புலமைப் பரிசில் மாணவர்களுக்கு ஏற்படும் உடல், உள, சமூக மற்றும் ஆத்மீக ரீதியான பிரச்சினைகள் இனங்காணப்பட்டு, அவைகள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளதோடு அவற்றுக்கான தீர்வுகள் மற்றும் மாற்று வழிகளை முன்வைக்கும் பொருட்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.



**விளக்கச் சொற்கள் (Key words ) :** உள மெய்யியல், கல்வி உளவியல், விழிப்புணர்வு

“இலங்கை முஸ்லிம் பெண்களின் தலைமைத்துவம்: ஒரு மெய்யியல் பகுப்பாய்வு’

**Supervisor**
*Mr. ML. Issadeen,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. MI. Fathima Susan Shinas,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**ஆய்வுச் சுருக்கம்**

தலைமைத்துவம் என்பது பிறப்பிலிருந்து ஒருவருக்குள் நிலைத்திருக்கும் ஆளுமைத் தன்மை என்றே நம்பப்படுகின்றது. ஆனால் உண்மையில் தலைமைத்துவம் என்பது பல்வேறு சந்தர்ப்பங்களாலும் நபர்களாலும் உருவாக்கப்படுகின்றது என்பதை அறிவதில்லை இவ்வுருவாக்கங்களின் போது இனம், மதம், மொழி, நிறம், பால், நாடு, நகரம் என்கின்ற வேற்றுமைகள் களையப்பட்டு வேறுபாடுகளுக்குள் ஒரு இணைவைக் காணமுடியுமாயிருக்கும். அந்தவகையில் பெண்களின் தலைமைத்துவம் என்பது இன்று உலகெங்கும் வியாபித்திருக்கின்றது என்பது கண்கூடு. இந்தியாவின் ஜனாதிபதி பிரதிபா பட்டேல், பங்களாதேஷ் பிரதமர் ஷேய்க் ஹசீனா, பிரித்தானியா எலிசபத் மகாராணி, ஐ. நா. மனித உரிமைகளுக்கான ஆணையாளர் திருமதி நவநீதம் பிள்ளை என பலர் கலை, இலக்கியம், மருத்துவம், விஞ்ஞானம், ஆய்வுகள், தொழிநுட்பம் என பல்வேறு துறைகளிலும் தம் திறமைகளால் தலைமைத்துவத்தை வெளிப்படுத்தத் தவறவில்லை. இத்தகைய பெண்தலைமைத்துவக் கருத்துக்கள் பரவலாக பேசப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலப் பகுதியில் தலைமைத்துவத்தினை இலங்கை முஸ்லிம் பெண்கள் ஏற்று நடக்கின்றனரா? இஸ்லாமிய பெண் தலைமைத்துவம் வகிப்பதை வீடு, சமூகம், சமயம், உலகம் என்பன ஆதரிக்கின்றதா? இஸ்லாத்தில் பெண் தலைமைத்துவம் பற்றிய உண்மையான நோக்கு என்ன? முஸ்லிம் பெண்கள் தலைமைத்துவம் வகிப்தனால் இன்று எத்தகைய சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பன இவ்வாய்வு தொடர்பான பிரச்சினைகளாகும். மேலும் இவ்வாய்வினூடாக இலங்கை முஸ்லிம் பெண்கள் தலைமைத்துவத்தினை ஏற்பதனால் சமூகமும் பெண்களும் அடையும் நன்மைகள், தீமைகள், பெண்களின் தலைமைத்துவம் தொடர்பான கருத்துக்களுக்கும் இலங்கை முஸ்லிம் பெண்களின் தலைமைத்துவம் தொடர்பான கருத்துக்களுக்கும் இடையிலான ஒற்றுமைகள், வேற்றுமைகள் ,பிரச்சினைகள் என்பவற்றை அறிந்து கொள்ளல் போன்ற நோக்கங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. இவ்வாறான நோக்கங்களை அடையும் பொருட்டு, முதலாம் நிலைத் தரவு மூலங்களையும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களையும் மற்றும் தொகுத்தறி ஆய்வு முறைகளையும் அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை முஸ்லிம் பெண்கள் சமூகத்தில் காணப்படுகின்ற ஆணாதிக்கச் சிந்தனைகள், பால்நிலை சமத்துவமின்னை, பெண்களின் உரிமை மறுப்பு, பெண்கள் மீதான வன்முறை போன்ற காரணிகளினால் பெண்தலைமைத்துவம் பற்றி கருத்துக்களுக்கு உட்பட்பட்டிருந்ததை அறியமுடிகின்றது என்பதனால் பெண்தலைமைத்துவக் கருத்துக்கள் முஸ்லிம் பெண்கள் மத்தியில் ஒருமித்த தன்மையும், வேற்றுமைப் போக்கும் காணப்படுகின்றது என்பது இவ்வாய்வின் மூலம் தெளிவாகியது. அத்துடன் பெண்தலைமைத்துவம் பற்றி பூரணமாக அறிவதற்கும் செயற்படுவதற்கும் எவ்வாறான தடைகள் உள்ளது என்பதையும் அறிந்து கொண்டேன்.

**Key words:** பெண், தலைமைத்துவம், பெண்தலைமைத்துவம், பிரச்சினை

## கருக்கலைப்பு ஒர் ஒழுக்கவியல் பார்வை

**Supervisor**
*Dr. ALM. Riyal,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. AB. Banazir Jahan,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

### ஆய்வுச் சுருக்கம்

கருக்கலைப்பு பற்றிய கருத்தானது, மரபு வழிப்பட்டதாகும். பெரும்பான்மையான கருக்கலைப்புக்களெல்லாம் சட்டரீதியற்றது எனக்கூறப்படுகின்றது. மனித வாழ்வின் ஒழுக்கத்திற்கும் மனிதன் கருவுறுவதற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. திட்டமிட்ட, தற்செயலான கருக்கலைப்புகள் எல்லாமே மனித உயிர்களின் உரிமைகளை அத்துமீறுவதாகும். இவ் அத்துமீறலை சட்டம் தடுக்க வேண்டும். பெண்களுக்கு அவர்களின் உடலில் ஏற்படுவதைக் கட்டுப்படுத்தும் உரிமையுண்டு. இவ்வுரிமை கருக்கலைப்பை நியாயமான ஒரு செயலாக்குகின்றது. ஒருவரின் உடலைக் கட்டுப்படுத்தும் உரிமையை சட்டம் குற்றமாக்கக் கூடாது. ஆனால் இவ்வாறான கருக்கலைப்பை எதிர்க்கின்ற குழுவினர், கருக்கலைப்பிற்கு உட்பட்ட பெண்கள் உடலியல், உளவியல், மருத்துவ ரீதியாக பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக அனுமானிக்கின்றனர். இன்னும் சட்டரீதியற்ற முறையில் செய்யப்படுகின்ற கருக்கலைப்புக்கள் பல பெண்களின் மரணத்திற்கு காரணமாக இருக்கின்றது. ஆனால், தேவையற்ற பிள்ளைகள் சமூகத்துக்கு எதிரிடையான தாக்கம் ஒன்றை ஏற்படுத்துகின்றன என்பதும் மறுக்க முடியாததே. எது எவ்வாறாக இருந்தாலும் கருக்கலைப்பைப் பற்றி இரண்டு வகையான கருத்துக்கள் உள்ளன. கருவின் ஒழுக்க நிலையும், கருவுக்கு உயிர்வாழ்வதற்கு உரிமை இருக்கின்றது என்ற வினாவையும் முதலாவது கருத்து உள்ளடக்குகின்றது. "கரு ஒரு வகை உயிர், அதைக் கொல்வது கண்டிப்பான பிழையாகும்" என்ற கூற்றை மையப்படுத்தியதாக இரண்டாவது வகைக் கருத்து அமைந்துள்ளது. இவ்வாய்வுக்கான தரவுகள் பிரதானமாக இரண்டாம் நிலை மூலங்களான இணையத்தளங்கள், நூல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டு அவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறுதியாக, இவ்வாய்வில் கருக்கலைப்பின் ஒழுக்கவியல் தன்மை ஆராயப்படுகின்றது.

**Key word**:- கருக்கலைப்பு, ஒழுக்கம்.

## "கட்டிளமைப் பருவ முஸ்லிம் பெண்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் : அம்பாறை மாவட்டத்தை மையப்படுத்திய ஆய்வு"


**Supervisor**
*Mr. ILM. Mahir,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Ms. AG. Inul Nasmila,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*


### ஆய்வுச் சுருக்கம்


உளவியல் நோக்கில் இளையோர் பிரச்சினைகள் இன்று பிரபலமாகப் பேசப்படுகின்றன. இளையோர்கள் எனப்படுவோர் கட்டிளமைப்பருவத்தினராவர். இவர்கள் ஆண்களாக இருப்பினும் சரி பெண்களாக இருப்பினும் சரி இவர்களது பிரச்சினைகள் ஆழமான விவாதத்திற்குரியது. இவ்வகையில் கட்டிளமைப்பருவ பெண்களில் குறிப்பாக அம்பாறை மாவட்ட முஸ்லிம் பெண்களை மையப்படுத்தி இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாய்வு கட்டிளமைப்பருவ முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் உடல், உள, சமூகப்பிரச்சினைகள் எத்தகைய மட்டங்களில் காணப்படுகின்றது என்பதை அடையாளப்படுத்துவதை பிரதான நோக்காகவும் பிரச்சினைகளின் நிலை அதற்கான காரணங்கள் மற்றும் தாக்கங்கள் என்பவற்றை கண்டறிவதை துணை நோக்கங்களாகவும் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கான தகவல்கள் முதலாம்நிலை, இரண்டாம்நிலை மூலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. முதலாம்நிலைத் தரவில் அவதானம், நேர்காணல் (Interview), வினாக்கொத்து (Questionair), இலக்கு குழு கலந்துரையாடல் (focus group discussion - FGD) போன்றவை அடங்குகின்றன.அதேபோல் இரண்டாம்நிலை தரவில் நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வறிக்கைகள், கட்டுரைகள், பத்திரிக்கைகள், இலத்திரனியல் ஊடகம் போன்றவையும் அடங்குகின்றன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் எண்ணளவான முறை (Quantitative method), மற்றும் தரஅளவிலான முறை (Qualitative method) என்பவற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இறுதியாக, கட்டிளமைப்பருவ முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் சமூகப்பிரச்சினைகளுக்கான காரணங்களை இனங்கண்டு, அவைகளை அடையாளப் படுத்தப்படுத்துவதோடு அதனால் ஏற்படும் தாக்கங்களையும் எடுத்துக்காட்டுவதாக இவ்வாய்வு அமைகிறது.



**Key words:** கட்டிளமைப்பருவம் (Adolescence) முஸ்லிம்பெண்கள் ( Muslim Girls) சமூகப் பிரச்சினைகள் (Social Problems)

## “மனிதனது கடமையும் விலங்கினங்களை பாதுகாக்க வேண்டிய தேவையும்’ - ஓர் மெய்யியல் பகுப்பாய்வு. இலங்கையின் அண்மைக்கால போக்கினை ஆதாரமாகக் கொண்ட ஆய்வு


**Supervisor**
*Mr. N. Sivakaran,*
*Lecturer,*
*Department of Philosophy,*
*University of Jaffna*

**Researcher**
*Miss. M. Mayoor,*
*Department of Philosophy,*
*University of Jaffna*


### ஆய்வுச் சுருக்கம்


சமகால ஒழுக்க மெய்யியலில் மனிதரல்லாத விலங்குகளது உரிமைகள் மற்றும் அதன் நலன்கள் தொடர்பான கருத்துக்கள், செயற்பாடுகள் முதன்மை பெற்று காணப்படுகின்றன. இத்தகைய சிந்தனைகளும் செயற்பாடுகளும் அண்மைக் காலங்களில் மேலைத்தேய நாடுகளில் அதிகமாக வலியுறுத்தப்படுவதை காணமுடிகிறது. குறிப்பாக பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பல நூறு அமைப்புக்கள் உருவாகப்பட்டு மனிதரல்லாத விலங்குகளது உரிமைகள், அதன் நலன்களை பேணுவதில் அக்கறை செலுத்தி வருகின்றன. எனினும் கீழைத்தேய நாடுகளில் குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளிலும் தற்காலங்களில் இலங்கையிலும் விலங்குகளைப் பாதுகாப்பதன் அவசியம் வலியுறுத்தப்பட வேண்டிய தேவை அவசியமாக உணரப்பட்டு வருவதனைக் காண முடிகிறது. அந்த வகையில் இவ் ஆய்வுக் கட்டுரையானது இயற்க்கைச் சூழலில் உயிர்ணங்களினை பாதுகாக்க மனிதனானவன் எவ்வாறு செயல்பட வேண்டும்? மனிதர்கள் ஏன் விலங்ககளை பாதுகாக்க வேண்டும்? அவற்றினை பாதுகாப்பதற்காக அவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் என்ன? இவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் அனைத்தும் ஒழுக்கவியல் அடிப்படையில் மேற்க்கொள்ளப்படுகின்றனவா? விலங்குகளைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் என்ன? அவை எவ்வளவு தூரம் நடைமுறை சாத்தியப்பாட்டினைக் கொண்டுள்ளன? போன்ற விடயங்களை உள்ளடக்கிய வகையில் இவ் ஆய்வுக் கட்டுரையானது அமைந்து காணப்படுகின்றது. மகாத்மகாந்தி *‘The Greatness of a nation and its moral progress can be judged by the way animals are treated in a nation’* எனக் குறிப்பிடுகின்றார். இவ்வாறானதொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு மனிதன் தனது கடமைகளில் ஒன்றான விலங்குகளைப் பாதுகாத்தல் பணியை சரிவர நிறை வேற்றுதல் வேண்டும் இன்றைய மானிடப் பேராசை யுகத்தில் மனித இனம் காட்டி வரும் கட்டற்ற வளர்ச்சி என்ற கொடூரமும் பொருளாதார மேம்பாட்டிற்காக யார் குடியைக் கெடுத்தாலும் தவறில்லையென்னும் நுகர்வு கலாசாரமும் கடந்த 30 ஆண்டுகளில் வரலாறு காணாத அழிவை இயற்கை வளங்களுக்கும் பல்லுயிர் வளத்திற்கும் ஏற்படுத்தி வருகின்றன. ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’**.** என்று உலகில் தோன்றிய அனைத்து உயிர்களையும் ஒரே தளத்தில் வைத்தது தமிழ் மரபு. அனைத்து உயிர்களும் இன்புற்று வாழ்வதற்கான உரிமை உண்டு என்பது நமது சிந்தனை மரபு. மனிதன் தன்னைத்தான் பேணிக்கொள்வது மட்டும் அவனது கடமையல்ல. இப் பூமியையும் அதில் ஏனைய ஜீவராசிகளையும் பாதுகாக்க வேண்டியதும் அவனது கடமையாகும். இல்லாவிடில் மனித இருப்புக்கே அச்சுறுத்தலாகிவிடும். இயற்கையானது தன்னியல்பான முறையில் ஓர் சமநிலையை பேணி வருகின்றது. மனிதனது செயற்பாடுகள் இச் சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதனால் தான் இன்று பல இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. இயற்கையின் சமநிலையில் விலங்குகளின் இருப்பும் அவற்றின் இயல்பான செயற்பாடுகளும் இன்றியமையாதது. இந்நிலையில் விலங்குகளை அளவுக்கு அதிகமாக கொல்வதும், அவற்றின் வாழ் இடங்களை அழிப்பதும் இயற்கையில் பாரிய விபரீதமான மாற்றத்தை ஏற்படுத்தும். எனவே பிற உயிர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையை கொண்டனவாக மனிதன் இருக்கின்றான். மனிதன் இன்று தான் சுயநலனிற்காக பூமியில் தான்மட்டும் நல்ல

வண்ணம் வாழ்ந்தால் போதும் என்ற குறுகிய எண்ணத்தில் பிற விலங்குகளை தனது அடிமைகளாகக் கருதி செயற்படுகிறான். மனிதர்களினது பல்வேறு தேவைகளிற்குள்ளும் விலங்குகளின் உரிமைகள் மற்றும் நலன்கள் அகப்பட்டு நசிந்து போய்விடுகின்றன. இன்று எமது சமூகங்களில் மனிதரல்லாத விலங்குகளை மனிதர்கள் கையாளுகின்ற நிலைமை மிகவும் மோசமானதாக இருக்கின்றது. மனிதர்கள் தமது உணவிற்காக, தமது பொழுது போக்கிற்காக, தமது தொழில்களுக்காக ஆய்வு கூடச் சோதனைகளுக்காக, மூட நம்பிக்கைகளின் அடிப்படையில் வேள்விக்காகப் பயன்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நிலைகளில் மனிதரல்லாத விலங்குகளை துன்புறுத்தியும் கொன்றும் வருவதன் மூலம் மனிதரல்லாத விலங்குகளிற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றனர். மனிதரல்லாத பிற விலங்குகளுக்கும் உயிருள்ளது அவற்றிற்கும் உணர்வுகள் உள்ளது அவையும் மகிழ்வினையும் துன்பத்தினையும் அனுபவிக்கக் கூடிய தன்மை கொண்டவை அவையும் இயற்கையாக மரணம் அடையும் வரை வாழ விரும்புகின்றன என்ற விடயங்களை பெரும்பாலான மனிதர்கள் கருத்தில் கொள்வதில்லை. இந் நிலைமை உலகில் பல்வேறு சமூகங்களிலும் பெரும் பிரச்சினையாக இன்று உருவெடுத்து நிற்கின்றது.

தமிழர் பண்பாட்டின் தலை சிறந்த பாரம்பரியங்களாக இருந்து வருகின்ற பிறர்குறித்த அன்பும் அக்கறை காட்டல் கொல்லாமை எமது கடமைகயை ஒழுக்கத்துடன் நிறைவேற்றல் போன்ற எமக்கென விதிக்கப்பட்ட கடமைகளை ஒழுக்கங்களையும் சரிவர நிறைவேற்றாது ஒழுக்க மீறல்களை மேற்கொள்கின்றோம். இலங்கையில் விலங்குகளுக்கு இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளையும் வேதனைகளையும் குறைப்பதற்கு அரசினது செயற்பாடுகளும் சட்டங்களும் இன்னமும் முக்கியமான பங்களிப்பு எதனையும் நல்கிவிடவில்லை என்ற குற்றச்சாட்டுக்களும் பல்வேறு தரப்பினர்களால் முன்வைக்கப்படுகின்றன. இந்தவகையில் விலங்குகளின் உரிமைகள் தொடர்பாகவும், அதன் நலன்களை பேணுதல் தொடர்பாகவும் இலங்கை கூடிய அக்கறை செலுத்தப்பட வேண்டிய அவசியத்தினை வலியுறுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

இக்கட்டுரையானது வரலாற்று ஆய்வு முறை, ஒப்பீட்டு ஆய்வு முறை, விமர்சன முறை, பகுப்பாய்வு முறை என்பவற்றின் துணை கொண்டு வடிவமைக்கப்படுருப்பதுடன் இக் கட்டுரைக்கு வேண்டிய தரவுகளானவை. 1ஆம் நிலைத் தரவுகள் :- விலங்குகளின் நலன் குறித்த சமூக ஆர்வலர்களுடனான நேர்காணல். 2ஆம் நிலைத்தரவுகள் - நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணைய தளங்கள் போன்றவற்றின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**Key words:** விலங்குகளது உரிமைகள், மனிதனது ஒழுக்கம், மனிதனது கடமை விலங்குகளது பாதுகாப்பு

# ஒழுக்கவியல் அணுகுமுறையினை அடிப்படையாகக் கொண்டு சூழல் பிரச்சினைகள் தொடர்பான விமர்சன ஆய்வு

**Supervisor**
*Mr. N. Sivakaran,*
*Lecturer,*
*Department of Philosophy,*
*University of Jaffna*

**Researcher**
*Mr. S. Kajannath,*
*Department of Philosophy,*
*University of Jaffna*

## ஆய்வுச் சுருக்கம்

சமகால உலகில் அதிக முக்கியத்துவம் பெறுகின்ற பிரச்சினையாக சூழல்பிரச்சனை அமைந்து விளங்குகிறது. சூழல் பிரச்சினை என்பது ஒரு நாட்டுக்குரிய பிரச்சினை அல்லாது பூகோள முழுமைக்குமான பிரச்சினையாக காணப்படுகின்றது. மெய்யியலில் 1950ஆம் ஆண்டளவில் இருந்து மேலைத்தேய மெய்யிலிலும் கீழைத்தேய மெய்யியலிலும் ஆய்வுக்குரிய முக்கிய ஒழுக்கப் பிரச்சினையாக சூழல் பிரச்சினை இருந்து வருகின்றது. நாடுகளின் போட்டி, வல்லாதிக்கம், விஞ்ஞான வளர்ச்சிகள், கைத்தொழில்புரட்சிகள், வளங்களின் ஊடாக நாடுகளின் வளர்ச்சி, மனிதனின் சூழல் அக்கறையின்மை போன்றன இன்று முக்கிய சூழல் பிரச்சினையாக மாறிவருகின்றது. இக்கட்டுரையில் மனிதனிற்கும் சூழலுக்கும் இடையிலான பரஸ்பர உறவினை வலியுறுத்துவதன் மூலம் நிலையான வாழ்க்கையினை உறுதிப்படுத்துவதாக இவ்வாய்வு அமைகிறது. மக்களிடம் சூழல் தொடர்பான தெளிவான அறிவினை பரப்புதல், எதிர்கால சந்ததியினருக்காக இப்போது வாழும் மக்களின் வாழ்க்கையினை எவ்வாறு சூழலுடன் ஒன்றிணைப்பது என்பது தொடர்பான சிந்தனைகளினை தெளிவுபடுத்துவதாக இவ்வாய்வு அமையவுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட வளங்களின் அளவினை அளவுமீறி தனது குறுகிய காலப் பாவனைக்காக பகுத்தறிவின்றிச் செயற்படுதல். பிரச்சினையாக உள்ளது. அண்மைக்காலமாக நிலப்பாவனை, காலநிலை மாற்றம் என்பன முக்கிய பிரச்சினையாகவுள்ளது. சூழல் சார்ந்த பிரச்சினையினை மனிதனின் ஒழுக்கம் சார்ந்த சிந்தனைகளோடு பொருத்திப் பார்ப்பதன் மூலம் சூழல் விழிப்புணர்வினை ஏற்படுத்தலாம் என்பது எனது ஆய்வின் நோக்கம். சூழல் சார்ந்த பிரச்சினை உலகம் சார்ந்த பிரச்சினையாக விளங்குவதனால் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் சூழல் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தலும் அதனை சிறுவயதிலிருந்தே பாடமாக்குதல் மூலம் சூழல் பிரச்சினையைக் குறைக்கலாம். இயற்கையுடன் ஒருமித்து இணைந்து வாழ்வதன் மூலமே பிற்பட்ட எமது சந்ததியினை இயற்கையிலிருந்து எவ்வித அழிவும் இன்றி காப்பாற்ற முடியும் என்பது இவ்வாய்வின் நோக்கமாகும். பகுத்தறிவுள்ள மனிதனின் திட்டமிடாத செயன்முறையின் மூலம் அளவுகடந்த இயற்கை வளங்களின் நுகர்ச்சியே சூழல் பிரச்சினைக்கு முக்கிய காரணம் மனிதன் தான் சூழலில் ஒரு பகுதியென உணர்தல். இவ்வாறான சூழல் பிரச்சினை தீர்க்கமுடியாது போனால் எதிர்கால சந்ததி பெரிய ஆபத்திற்குள்ளாகும் என்பதனை இவ்வாய்வு வலியுறுத்தவுள்ளது. இக்கட்டுரையானது, ஒப்பீட்டு ஆய்வு முறை, விமர்சன முறை, பகுப்பாய்வு முறை என்பவற்றின் துணை கொண்டு வடிவமைக்கப்பட்டிருப்பதுடன் இக்கட்டுரைக்கு வேண்டிய தரவுகளானவை பிரதானமாக இரண்டாம் நிலைத்தரவுகளினை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்டுள்ளது.

**Key words:** சூழல்பிரச்சனை, சூழல் ஒழுக்கம், மனித நடத்தை, காலநிலை மாற்றம்

# அளவையியலுக்கும் பகுப்பாய்வு மெய்யியலுக்குமான பேர்ட்டண்ட் ரஸலின் பங்களிப்பு - ஓர் விமர்சன ஆய்வு

**Supervisor**
*Mr. N. Sivakaran,*
*Lecturer,*
*Department of Philosophy,*
*University of Jaffna*

**Researcher**
*Mr. S. Nirosan,*
*Department of Philosophy,*
*University of Jaffna*

## ஆய்வுச் சுருக்கம்

இவ் ஆய்வுக்கட்டுரையின் நோக்கமானது அளவையியலுக்கும் பகுப்பாய்வு மெய்யியலுக்கும் பேர்ட்டண்ட் ரஸல் ஆற்றிய பங்களிப்பினை ஓர் விமர்சன நோக்கில் ஆய்வு செய்வதாக அமைகின்றது. இருபதாம் நூற்றாண்டில் மெய்யியலில் ஏற்பட்ட திருப்புமுனைக்கும், அதன் புரட்சிகரமான மாற்றத்துக்கும் அடிப்படையாக ரஸலினுடைய சிந்தனைகள் அமைந்திருந்தன. நவீன அளவையியல் அல்லது குறியீட்டு அளவையியலின் தோற்றத்தினூடாக சமகால மெய்யியலின் வளர்ச்சிப் பாதையானது பகுப்பாய்வு மெய்யியல், கண்ட மெய்யியல் என இருபெரும் பிரிவாக மெய்யியல் தோன்றுவதற்கு பேர்ட்டண்ட் ரஸலின் சிந்தனைகள் முதன்மையான இடத்தினைப் பெற்றிருந்தது. அவரது மெய்யியற் பார்வையில் "மெய்யியல் என்பது பிரச்சினைகளைத் தீர்ப்பது அல்ல மாறாக பிரச்சினைகளைத் தெளிவுபடுத்துவதே" என்பதனை வெளிப்படுத்தினர். மெய்யியலில் உள்ள பிரச்சனைகளானவை சாதாரண மொழியில் உள்ள குறைபாடுகளினாலேயே தோன்றுகின்றது, இதற்கு மொழியினை பகுப்பாய்வு செய்வதுவும், குறியீட்டு வடிவில் அமைப்பதுவும் இன்றியமையாதது என்பதனை வலியுறுத்தியிருந்தார் அதாவது அனைத்து மெய்யியல் சிந்தனைகளும், கருத்துக்களும் மொழியினால் கட்டுண்டவையே. மெய்யியலில் காணப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் மொழியே அடிப்படைக் காரணம். சாதாரண மொழியில் ஏற்படுகின்ற தவறான புரிந்துணர்வே மெய்யியற் பிரச்சினைகளுக்கு அடிப்படையாக அமைகின்றது. மெய்யியற் பிரச்சினைகளை தெளிவாக விளங்கிக் கொள்வதில் மொழி பிரச்சினையாக உள்ளது. இதனால் ரஸல் மொழி குறித்த பகுப்பாய்விற்கு முதன்மையளித்திருந்தார். அதன் மூலம் மெய்யியற் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்த முனைந்தார். இதனால் குறியீட்டு அளவையியல் வழியாக மெய்யியல் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தினை ரஸல் முன்வைத்தார். இதனூடாக அவர் குறியீட்டு அளவையியலின் வளர்ச்சிக்கு வழிவகுத்ததோடு, அதன் வழியாக மெய்யியற் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்து பகுப்பாய்வு மெய்யியலின் வளர்ச்சிக்கும் வித்திட்டார். அவர் வாதத்தில் துள்ளியம், மற்றும் தெளிவை சரியானதொரு மொழிப் பிரயோகத்தினாலும், தத்துவக் கோட்பாடுகளை அவற்றின் மிக எளிமையான இலக்கணப் பகுதிகளாக உடைத்தும் அடைய முயன்றார். இதுவே அவரால் முன்வைக்கப்பட்ட தர்க்க அணுவாதத்தின் பிரதான நோக்கமாகவும் அமைந்தது. ரஸலினது சிந்தனைகள் தர்க்கப் புலனெறிவாதத்திற்கு முன்னோட்டமான கருத்துக்களைக் கொண்டிருந்தன. நவீன அளவையியலும், பகுப்பாய்வு மெய்யியலும் இரு தனித்துவான துறைகளாக கண்டுகொள்ளப்படுகின்ற பொழுதிலும் அவை ரஸலினால் ஒருங்கிணைந்த வகையிலேயே முன்னெடுக்கப்பட்டிருந்தன. ரஸல் அளவையியலை பகுப்பாய்வு மெய்யியலில் ஒரு முறையியலாக பயன்படுத்தியிருந்தார். எனினும் ரஸலினது அளவையியல் குறித்த சிந்தனைகளினையும், பகுப்பாய்வு மெய்யியல் குறித்த சிந்தனைகளையும் ஒருங்கிணைத்த வகையிலான ஆய்வுகள் விரிவுபடுத்தப்படவில்லை. இந்தவகையில் அளவையியலுக்கும்,

பகுப்பாய்வு மெய்யியலுக்குமான பேர்ட்டண்ட் ரஸலினுடைய பங்களிப்புக்கள் அக்காலகட்டத்தில் பெற்றிருந்த முக்கியத்துவத்தினை ஆராய்வதோடு, பிற்பட்டகால குறிப்பாக சமகால மெய்யியல் வளர்ச்சியில் அதனுடைய செல்வாக்கினையும் ஆராய்வதே இவ்வாய்வினுடைய முக்கியமான நோக்கமாகும். மேலும் அளவையியலுக்கும், பகுப்பாய்வு மெய்யியலுக்கும் இடையிலான நெருக்கமான தொடர்பினை ரஸலினுடைய நிலைப்பாட்டினூடாக விளங்கிக் கொள்ளுதல், பகுப்பாய்வு மெய்யியலின் பிரதான இலக்கான பிரச்சினைகளை தெளிவுபடுத்துவதில் அளவையியலின் பங்களிப்பினை கண்டுகொள்ளுதல் என்பன இவ்வாய்வின் ஏனைய நோக்கங்களாகும்.

இவ் ஆய்வானது வரலாற்று முறையியல், விபரண முறையியல், ஒப்பீட்டு முறையியல், விமர்சன முறையியல், பகுப்பாய்வு முறையியல் என்பவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இவ் ஆய்விற்கான தரவுகள் ரஸலினது நூல்கள், பகுப்பாய்வு மெய்யியல், நவீன அளவையியல் என்பன தொடர்பான நூல்கள், சஞ்சிகைகளில் வெளியான கட்டுரைகள், இணையத்தளக் கட்டுரைகள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பெறப்படுகின்றன.

**Key words:** மெய்யியல் பிரச்சினைகள், நவீன அளவையியல், பகுப்பாய்வு மெய்யியல், தர்க்க அணுவாதம், தர்க்கப் புலனெறிவாதம்.